


***1கொரி 1:18 சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.***

அன்பு சகோதர, சகோதரிகளுக்கு ! இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு நமக்காக கல்வாரி சிலுவையில் கிருபாதார பலியாக மரித்த இயேசுவின் பாடுகளை, மரணத்தை தியானித்துக்கொண்டிருக்கும் இந்நாட்களில் 'சிலுவையைப்பற்றிய உபதேசம்' - சிலுவை என்றால் என்ன ?, சிலுவையைப்பற்றிய உபதேசம் என்ன ? அது எவ்வாறு இரட்சிக்கப்படுகிற நமக்கு தேவ பெலனாயிருக்கிறது ? இயேசு கல்வாரி சிலுவையில் எதற்காக மரித்தார் ? அதனால் நமக்கு என்ன கிடைத்திருக்கிறது ? என்று தியானிப்போம்.

## 'சிலுவையின்' அர்த்தம்.

புதிய ஏற்பாட்டில் 'சிலுவை' என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை **"ஸ்டாரஸ்"** என்பதாகும். இது *மத் 27:32*ல் இயேசு மரித்த சிலுவையை குறிக்கிறது. *1 கொரி 1:17-18* ல் 'சுவிசேஷத்தை' குறிக்கிறது. *கலா 5:11; 6:12,14;* போன்ற இடங்களில் உலகத்தை உதறிவிட்டு உண்மையான விசுவாச வாழ்வு வாழ்வதை குறிப்பிடுகிரது. மத் *10:38* போன்ற இடங்களில் இயேசுவோடு கூட அடையாளப்படுத்தும் பாடுகளை குறிப்பிடுகிறது.

*1 கொரி 1:18ல் 'சிலுவை' என்ற வார்த்தை "நமக்கு பதிலாக இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்து', அதன் மூலமாக நமக்காக நிறைவேற்றியிருக்கிற காரியங்களை" குறிப்பிடுகிறது.*

**"ஸ்டாரஸ்"** என்ற வார்த்தைக்காக கீழ்க்காணும் வினைச்சொற்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

1. **'ஸ்டாரூ'**. இது *மத் 20:19* ல் 'சிலுவையில் அறையப்படும் செயலை' குறிப்பிடுகிறது.*கலா 5:24* 'இயேசுவுக்குள்' இருக்கும் விசுவாசியின் நிலையைப்பற்றி குறிப்பிடுகிறது.
2. **'ஸுஸ்டாரு'** *மத் 27:44; மாற்கு 15:32; யோவான் 19:32* போன்ற இடங்களில் கள்ளர்களோடு கூட சிலுவையில் அறையப்பட்டதை குறிப்பிடுகிறது. *ரோமர் 6:6; கலா 2:20* போன்ற இடங்களில் இயேசுவின் மரணத்தில் ஆவிக்குரிய பிரகாரமாக இணைக்கப்பட்டிருப்பதை குறிப்பிடுகிறது.
3. **'அனஸ்டாரூ'**. *எபி 6:6* இயேசுவை மீண்டும் சிலுவையில் அறைவதை குறிப்பிடுகிரது.
4. **'பிராஸ்பெக்னுமி'**. *அப் 2:23*. இயேசுவை சிலுவையில் ஆணியால் அடித்து அதனுடன் இணைத்து கொலை செய்ததை குறிப்பிடுகிறது.

## சிலுவையைப்பற்றிய உபதேசம்.

'சிலுவையைப்பற்றிய உபதேசம்' என்றால் **'சிலுவையில் இயேசுகிறிஸ்து செய்த கிருபாதார பலியினால் மாத்திரமே இரட்சிப்பு கிடைக்கிறது' என்று எடுத்துரைக்கும் உபதேசம்**. இயேசு கிறிஸ்து ஒரு தியாகியைப்போல மாத்திரம் சிலுவையில் மரிக்கவில்லை; மனுக்குலத்தின் பாவங்களுக்கான கிருபாதாரபலியாக அவர் மரித்தார். அவரது சிலுவையின் பாடுகளுக்கான காரணம் இதுதான். இதுதான் தேவன் மனுக்குலத்துக்கு இரட்சிப்பை கொடுக்கிற ஒரே வழி. இந்த இரட்சிப்பு 'ஒரு ஈவு' ( *எபே 2:8* ). இது சம்பாதிக்க முடிகிற சம்பாத்தியம் அல்ல. இயேசு கிறிஸ்து நம் பாவங்களுக்கான அனைத்து தண்டனைகளையும், மரணத்தையும் கூட ஏற்றுக்கொண்டதனால், நமக்கு கிடைக்கிற 'ஈவு'. நாம் இப்போது செய்ய வேண்டியதெல்லாம் இதை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டியது மாத்திரமே. இது தேவனுடைய மகா பெரிய கிருபை.

*1 கொரி 1:18* ல் "சிலுவையைப்பற்றிய உபதேசம்"...... **தேவ பெலன்** என்று பவுல் குறிப்பிடுகிறார். *ரோமர் 1:16* ல் 'கிறிஸ்துவின் சுவிசேஷம்'.....தேவ பெலன் என்று குறிப்பிடுகிரார். ஆகவே, "இயேசுகிறிஸ்து நம் பாவங்களுக்கான அனைத்து தண்டனைகளையும் ஏற்றுக்கொண்டு கிருபாதார பலியானார்; இதை விசுவாசித்து

ஏற்றுக்கொள்வதே மனுக்குலம் இரட்சிக்கப்படுவதற்கான ஒரே வழி" என்ற தேவனுடைய மகாப்பெரிய கிருபையினாலான சுவிசேஷம் - சிலுவையைப்பற்றிய உபதேசம், தேபெலனாயிருக்கிறது.

இங்கே 'பெலன்' என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை "டுனாமிஸ்" என்பதாகும். இது வெடி மருந்தை குறிப்பிடுவது அல்ல. 'டைனமைட்' என்ற வார்த்தை 'டுனாமிஸ்' என்ற வார்த்தையின் மொழி பெயர்ப்பு அல்ல 'எழுத்துப்பெயர்ப்பு' (transliteration). இது 'ஒரு பொருளுக்குள் இயற்கையிலேயே, அதன் குணமாக, அதனுள் இருக்கிற பெலனை" குறிப்பிடுகிறது. இதில் இருந்து நாம் மனதிலாக்கிக்கொள்ளலாம், 'சிலுவையைப்பற்றிய உபதேசம்' தேவனுடைய கரங்களில் இருக்கிற ஒரு வல்லமையான காரியம்' அல்ல, மாறாக **'சிலுவையைப்பற்றிய உபதேசத்துக்குள் தேவ பெலன் அதன் குணமாக இயற்கையிலேயே அடங்கியிருக்கிறது'**. அதனால்தான் சுவிசேஷம் என்பது "பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்தப்பட்ட இரட்சிப்பின் நற்செய்தி" என்று அழைக்கப்படுகிறது.

## இயேசு கிறிஸ்து நம் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி.

*ரோம 3:26 கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.*

*1யோவா 2:2 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற **கிருபாதாரபலி** அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*

*1யோவா 4:10 நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற **கிருபாதாரபலியாகத்** தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.*

நம்முடைய பாவங்களுக்கான கிருபாதாரபலி இயேசு கிறிஸ்து. *ரோமர் 3:25* ல் இதற்காக குறிப்பிடப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை 'ஹிலஸ்டிரியன்' என்பதாகும். *1யோவான் 2:2, 4:10* ல் குறிப்பிடப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை 'ஹிலஸ்மாஸ்' என்பதாகும். இவ்வார்த்தைகள் கிரேக்க புறமதத்தில் உபயோகிக்கப்படுபவை. **'ஹிலஸ்டிரியன்'** என்ற வார்த்தையின் அர்த்தம் 'பரிகாரபலி'. **'ஹிலஸ்மாஸ்'** என்ற வார்த்தையின் அர்த்தம் 'கோபத்தை தணிக்க ஒரு வழிமுறை' ( **பரிகாரம்;** ஏதாவது தவறு செய்து அதன் காரணமாக எழும் கோபத்தை தணிப்பது அல்லது ஆற்றுவது. பாவத்துக்காக பிராயச்சித்தம் செய்வது). கிரேக்க புறமதத்தார், அவர்களுடைய தெய்வங்களின் கோபங்களை தணிப்பதற்காக பலி கொடுப்பதுண்டு. இங்கே கிருபாதாரம் என்ற வார்த்தைக்கான அர்த்தம் 'கோபத்தை தணித்து சாந்தப்படுத்துதல், ஒப்புரவாக்குதல். ஆனால் இதேமாதிரியான அர்த்தத்தை வேதாகமத்தில் நம் தேவனுக்கு கொடுப்பது சரியல்ல. வேதாகமத்தில் நம் தேவனைப்பார்க்கும்போது, நம் இயேசுவுக்கு 'ஹிலஸ்டிரியன்' (*லேவி 16:14* ) 'ஹிலஸ்மாஸ்' (*எபி 9:5*) ஆகிய இவ்விரு வார்த்தைகளையும் உபயோகிக்கலாம். நம் இயேசு இந்த இரண்டுமாக இருக்கிறவர். வேதாகமத்தில், இந்த வார்த்தைகள், 'பழிவாங்கும் தேவனை சாந்தப்படுத்துகின்றவை' என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்படவில்லை. மாறாக, 'அவருடைய நீதியின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவரது பரிபாலனம் முறையாக நடத்தப்படுவதற்காக செய்யப்படுவது. இதனால் நீதியாக இரக்கம் காண்பிக்கப்பட முடியும்' என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

தேவன் மனிதனிடம் இருந்து பிரிந்து செல்லவில்லை. தேவன் அவரது சுபாவத்தின் படி அன்பாயிருக்கிறார், அவர் பாவியை சிநேகிக்கிறார். ஆனால், அவர் இரட்சிப்பினால் மனிதனை ஆசீர்வதிக்க முயன்றபோது, மனிதனுடைய பாவம் தேவனுக்கு முன்பாக ஒரு தடையை போட்டது. அந்த தடை "பிரமாணத்தை மீறியதும் மனிதனுடைய குற்ற உணர்வும்". பிரமாணத்தை மீறினது நியாயம் தீர்க்கப்பட வேண்டும், குற்ற உணர்வு சுத்திகரிக்கப்பட வேண்டும். ஆகவே பிரமாணத்தை மீறி குற்றவாளிகளான மனுக்குலத்தின் மேல் அதற்கான தண்டனை விழாமல் இருக்கவும், நீதி நிறைவேற்றப்பட்டதால் தேவன் மனுக்குலத்தின் மேல் தன் இரக்கத்தை பொழியவும், இயேசுதாமே தேவனது பரிசுத்தத்துக்கும் நீதிக்கும் தகுந்ததான கிருபாதார பலி ஆனார்.

*எபிரேயர் 10:2, 14, 18, 26* வசனங்களின்படி, பாவங்களுக்கான நித்திய பலி இயேசு கிறிஸ்து மாத்திரமே. வேறு பலி இல்லை. உலகம் முழுவதற்குமான பாவங்களுக்குமான போதுமான பலி இயேசு கிறிஸ்துவே. அவரது கிருபாதாரபலி நித்தியத்துக்கும் போதுமானது. இயேசுவின் பலியினால் பிதா நித்தியத்துக்குமாக திருப்தியடைந்திருக்கிறார்.

## இயேசுகிறிஸ்து எப்படி கிருபாதாரபலியாக செலுத்தப்பட்டார் ?.

மனுக்குலத்தின் பாவங்களுக்கான கிருபாதார பலியாக செலுத்தப்பட்டபோது இயேசுவுக்கு நடந்த காரியங்களில் சில ... **அவமானம், நிந்தை, பரிகாசம், கொடும் வேதனை, வியர்வை இரத்தத்துளிகளாக வருமளவுக்கு மன-சரீர வேதனை, முள்முடி, பிதாவால் கைவிடப்படுதல், சிலுவை மரணம்.**

இதில் "சிலுவை மரணத்தை சற்று விபரமாக பார்ப்போம்"

சிலுவை மரணத்தின் இரண்டு பகுதிகள்

### 1. வாரினால் அடிக்கப்படுதல்.

ரோமர்கள் உபயோகப்படுத்திய வார் என்பது, ஒரு கைப்பிடியும் சுமார் 12 தோல் நார்களும் உடையது. இந்த தோல் நார்களின் இடையிலும் கடைசியிலும் எலும்புத்துண்டுகளும் உலோகத்துண்டுகளும் இணைக்கப்பட்டிருக்கும். அடிக்கப்படுபவர் முதுகுப்புறம், முகத்தில் துணி இல்லாமல் ஒரு தூணில் கட்டப்பட்டிருப்பார். மிகவும் பலம் வாய்ந்த போர்ச்சேவகர்கள் இதை உபயோகித்து அடிப்பார்கள். இப்படி அடிக்கும்போது ஒவ்வொரு அடியிலும் தோல் உரிந்து சதை பிய்க்கப்படும். இதை தாங்க முடியாமல் பலரும்

மயங்கி விழுந்து மரிப்பார்கள். மிக கடுமையான குற்றம் புரிந்தவர்களுக்கும், சித்திரவதை செய்து தகவல் அறியவும், இந்த தண்டனை கொடுக்கப்பட்டது. யூத வழக்கப்படி 40 முறை ஒருவர் வாரினால் அடிக்கப்படலாம் *( உபா 25:3* ). இது பின் 39 அடிகளாக குறைக்கப்பட்டது *( 2 கொரி 11:23-25 ).* இயேசு கிறிஸ்துவை அடிக்க பயன்படுத்திய வார் சுமார் 12 நார்களை கொண்டிருந்ததென்றால், அவர் இதனால் 39 முறை அடிக்கப்பட்டார் என்றால் அது **468** அடிகள். இப்படி அடிக்கப்பட்டதால் இயேசு கிறிஸ்துவின் முதுகுப்புறம், முதுகின் கீழ்ப்புறம், முகத்தின் பக்கங்கள், கழுத்துப்பகுதி அனைத்தும் தோல் முழுவதும் உரிந்து சதைகள் பிய்க்கப்பட்டு இரத்தக் களறியாக இருந்திருக்கும். இயேசுவின் சரீரத்தின் இந்த காட்சியைத்தான், அவரது ரூபம் ' இவ்வளவு அந்தக்கேடு' அடைந்தது என்று *எசாயா 52:14* சொல்கிறது.

## 2. சிலுவையில் அறையப்படுதல்.

சிலுவையில் அறையப்படுதல் என்பது மிகவும் கொடூரமான, மிகக்கேவலமான மரணம். சுமார் 4 விதமான சிலுவைகளைப்பற்றி சரித்திர வல்லுனர்கள் கூறுகின்றனர். இயேசு அறையப்பட்ட சிலுவை ஏறத்தாழ T வடிவத்தில் இரண்டு மரத்தடிகளால் உருவாக்கப்பட்டது. குறுக்கான மரத்தடியில் நடுவில் ஒரு மரத்துண்டில் குற்றவாளியின் குற்றம் எழுதப்பட்டு வைக்கப்படும். நேரான மரத்தடியில் நடுப்பாகத்தில் ஒரு மரத்துண்டு காணப்படும், அதில் சிலுவையில் அறையப்படுபவர் தன் சரீரத்தின் எடையை வைத்து உட்கார்ந்து இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். சிலுவையில் அறையப்படுகிறவருக்கு வலி தெரியாமல் இருக்கும்படியாக வினிகர், காடி போன்றவற்றால் உருவாக்கப்பட்ட ஒருவகை மதுபானம் கொடுக்கப்படும். இயேசு கிறிஸ்து இதை குடிக்க வில்லை *( மத் 27:34 ).* குற்றவாளியின் இரண்டு கைகளும் குறுக்கு தடியில் விரித்து, மணிக்கட்டு பகுதி வாரினால் கட்டப்படும் அல்லது பெரிய ஆணிகளால் அடிக்கப்படும். கால்களின் கணுக்கால் பகுதிகள் சேர்த்து வாரினால் கட்டப்படும் அல்லது, இரண்டு பாதங்களும் சேர்த்து ஆணியினால் அடிக்கப்படும். இயேசுவின் கைகளும் கால்களும் ஆணிகளால் அறையப்பட்டது என்ற அர்த்தத்திலேயே அநேக வேத வசனங்கள் இருக்கின்றன *( சங் 22:16; யோவான் 20:27, அப் 2:23).* ஆனால் எத்தனை ஆணிகள் என்பது தெளிவாக தெரியவில்லை. இப்படியாக ஆணிகள் அறைப்படும்போது அவை தசைகளையும், நரம்புகளையும், எலும்புகளையும் உடைத்து விட்டு கைகளை கால்களை மிகவும் கொடூரமான வகையில் மரத்தடியோடு இணைத்திருக்கும். இப்படியாக தொங்கவிடப்படும் மனிதரின் மொத்த எடையும் கைகளிலும் கால்களாலும் இழுக்கப்படுவதால் மூச்சு விடுவது மிகவும் சிரமமாக இருக்கும். பலர் இந்நிலையில் மூன்று நாட்கள் வரை சித்திரவதை அனுபவித்ததாக குறிப்பிடப்படுள்ளது. சில சமயங்களில் இம்மனிதருக்கு கருணை காண்பிக்கும் விதத்தில் அவரது அக்குள் பகுதியிலோ அல்லது கால் மூட்டு பகுதியிலோ, ஒரு பெரிய சுத்தியலால் அடித்து எலும்புகள் முறிக்கப்படும். இது அம்மனிதருக்கு சீக்கிரமாக மரணம் சம்பவிக்க உதவியாக இருக்கும். இந்நிலையில் தொங்கவிடப்படுபவரை, அவர் மரிக்கு முன்பே பலவித பறவைகள் வந்து கொத்தி சரீரத்தை கிழித்து எடுத்து உண்ணும். தொங்க விடப்படுவதால் மூளைக்கு இரத்த ஓட்டம் குறைந்து, நினைவுகள் தாறுமாறாக இருக்கும்.

இவ்வழக்கம் 'செமிராமிஸ்' என்ற 'நிம்ரோத்தின் ராணியினால்' உருவாக்கப்பட்டதாக எண்ணப்படுகிறது. சீரியர், எகிப்தியர், பாரசீரர், கிரேக்கர், ரோமர் போன்றவர் இவ்வழக்கத்தை கடைபிடித்ததாக நம்பப்படுகிறது. இது மிகவும் கேவலமாக கொடூரமான குற்றங்கள் புரிந்த அடிமைகளுக்கும், குற்றவாளிகளுக்கும் மாத்திரமே கொடுக்கப்படுவது. மிகவும் கேவலமான, கடைசியான கொடூர தண்டனை இது. இது தீயினால் எரிக்கப்படுவதை விட கொடூரமானது. ரோமர்கள் சிலுவையில் அறையப்படுவது இல்லை. யூதர்களிடம் சிலுவையில் அறையும் வழக்கம் இல்லை. குற்றவாளிகளை கொன்று மரத்தில் தொங்க விடப்படும் வழக்கம் இருந்தது ***(யோசுவா 8:29; 10:26).*** மோசேயின் நியாயப்பிரமாணத்தின் படி மரத்தில் தொங்கவிடப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் *( உபா 21:22-23; கலா 3:13 ).* ஆனாலும் இத்தகைய மரணத்தைத்தான் தேவனுடைய ஜனமாகிய யூத ஜனம் இயேசுவுக்கு கொடுக்கும்படியாக கூக்குரலிட்டது, வற்புறுத்தியது *( மாற்கு 15:13,14 ).*

இயேசு தன் சிலுவையை தானே பெரும்பாலான தூரமும் சுமந்து சென்றார். இதன் நிழல்தான் ஈசாக்கு தன் தகனபலிக்கான கட்டைகளை தானே சுமந்து சென்றது *( ஆதி 22:6 ).* இயேசு அறையப்பட்ட சிலுவை, அதன் குழியில் இடப்பட்ட போது, அதன் வேகத்தால் சரீரத்தின் பல மூட்டுக்களும் இடம் பெயர்ந்திருக்கும்*(சங் 22:14).* இயேசுவின் கைகளில் கால்களில் ஆணிகள் அறையப்பட்ட இடத்தில் காயங்கள் உப்பி புண்ணாகத்தொடங்கியிருக்கும். "டெட்டானஸ்" நோய் உடம்பில் பரவத்தொடங்கியிருக்கும். மூச்சு விட வேண்டுமென்றால் சரீரத்தை சற்று மேலே தூக்க வேண்டும், இது மீண்டும் மீண்டும் கொடூரமான வேதனையை இயேசுவுக்கு உருவாக்கியிருக்கும். ஏற்கனவே, 'அவரைப்பார்க்க முடியாமல் நம் முகங்களை மறைத்துக்கொள்ளும் அளவுக்கு அவரது சரீரம் கொடூரமான முறையில் சிதைக்கப்பட்டிருந்தது'. இந்நிலையில் நரம்புகளும் தசைகளும் உடல் எடையால் இழுக்கப்படுவது இயேசுவுக்கு மகா கொடிய வேதனையை உருவாக்கியிருக்கும். இரத்த ஓட்டம் மீண்டும் முறையாக இருதயத்துக்கு செல்ல முடியாததால், இரத்தக்குழாய்கள் புடைத்து கொடூரமான வேதனையை உருவாக்கியிருக்கும். இவை எல்லாம் சரீரத்தின் தண்ணீர் அளவை மிகவும் குறைத்து பயங்கரமான தாகத்தை உருவாக்கியிருக்கும் *( யோவான் 19:28 ).* அவரது விலாவில் குத்தப்பட்ட ஈட்டி அவரது இருதயத்தை துளைத்து சென்று இரத்தமும் தண்ணீரும் பீறிட்டது *(யோவான் 19:34).* இயேசுவின் எந்த பக்கம் குத்தப்பட்டது

என்பது தெளிவாக தெரிய வில்லை. இயேசு இரண்டு கள்ளர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார் *( ஏசாயா 53:12 ).*

இயேசு சிலுவையில் தொங்கி இந்த மரண வேதனையை நமக்காக சுமார் **6 மணிக்கூர்கள்** அனுபவித்தார்.
*மாற் 15:25 அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம்மணி வேளையாயிருந்தது.* யூதர்கள் சமயம் கணக்கிடுவதை சூரிய உதயத்தில் இருந்து தொடங்கினார்கள். அதன் படி இயேசு சிலுவையில் அறையப்பட்ட இந்த மூன்றாம் மணி என்பது, நமது கணக்கின்படி சுமார் காலை 9 மணி. இயேசு சுமார் 3 மணிக்கூர்கள் சிலுவையில் தொங்கின பிறகு மாலை மூன்று மணி வரை சுமார் 3 மணிக்கூர்கள் இருள் இருந்தது ( *மாற்கு 15:33; மத் 27:45; லூக்கா 23:44* ). சுமார் மாலை 3 மணி அளவில் இயேசு தன் ஜீவனை விட்டார் ( *மாற்கு 15:34-37; மத் 27:46-50; லூக்கா 23:46* ). இதன் படி இயேசு கிறிஸ்து **சுமார் 6 மணிக்கூர்கள் சிலுவையில் தொங்கி மரண வேதனையை அனுபவித்தார்.**

இயேசு சிலுவையில் மரண வேதனையின் மத்தியிலும் 7 வாக்கியங்களை உரைத்தார் (1) *லூக்கா 23:34*; (2) *23:43;* (3) *யோவான் 19:26;* (4) *மத் 27:46; மாற்கு15:34;* (5) *யோவான் 19:28*; (6) *19:30;* (7) *லூக்கா 23:46.* இயேசுகிறிஸ்துவின் பாடுகள் எல்லாம் மிக மிக தெளிவாக தீர்க்கதரிசிகளால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உரைக்கப்பட்டு அவைகள் அனைத்தும் தெளிவாக நிறைவேற்றப்பட்டன. *எசாயா 53, சங்கீதம் 22, மத்தேயு 27, மாற்கு 15, லூக்கா 23, யோவான் 19* போன்ற வேத பாகங்கள் இயேசுவின் பாடுகளையும் சிலுவை மரணத்தையும், எல்லாவற்றுக்கும் மேலாக அவரை வேதனைப்படுத்திய மிக தெளிவாக எடுத்துரைக்கின்றன.

## இயேசுகிறிஸ்து நம் பாவங்களுக்கான கிருபாதாரபலியானதால் நமக்கு கிடைத்தவை என்ன ?

இயேசு கிறிஸ்து நமக்காக கிருபாதாரபலியாகி சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்ததினாலேயே, தேவன் நமக்காக வைத்திருக்கின்ற அனைத்தும் நமக்கு கிடைக்க முடியும். இதனாலேயே நாம் " நீதிகரணம், பரிசுத்தம், ஒப்புரவாகுதல், மீட்பு போன்ற அனைத்தையும் பெற்றுக்கொள்கிறோம். தேவனிடம் இருந்து நாம் பெற்றுக்கொள்கிறவைகள் அனைத்தும் இம்மைக்கும், மறுமைக்கும் உடையவை ( *1 கொரி 15:19; கலா 1:4* ). இயேசு நமக்காக மரித்தது நாம் நரகத்துக்கு போகாமல் தப்பித்து பரலோகம் செல்ல வேண்டும் என்பதற்காக மாத்திரம் அல்ல. **இயேசு எதற்காக மரித்தார்** என்பதை பற்றி சொல்லும் சில தெளிவான வசனங்களை பார்ப்போம்.

*2கொரி 5:21 நாம் அவருக்குள் **தேவனுடைய நீதியாகும்படிக்கு**, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*
*ஏசா 53:4 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, **நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்;** நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.*
*ஏசா 53:5 நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; **நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை** அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.*
*மத் 8:17 அவர் தாமே **நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு**, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.*
*1பேது 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, **நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு,** அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.*
*1பேது 2:25 சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ **உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும்** கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்.*
*2கொரி 8:9 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், **நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு,** உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.*

இயேசு நமக்காக கிருபாதார பலியாக மரித்ததனால்..... நாம் தேவனுடைய நீதியாக இருக்க வேண்டும், நீதிமான்களாக இருக்க வேண்டும், பாடுகள் இல்லாதவர்கள் ஆக இருக்க வேண்டும், துக்கங்கள் இல்லாதவர்கள் ஆக இருக்க வேண்டும், சந்தோஷமாக இருக்க வேண்டும், சமாதானம் உள்ளவர்களாக இருக்க வேண்டும், குணமானவர்களாக இருக்க வேண்டும், பெலவீனங்கள் இல்லாதவர்களாக இருக்க வேண்டும், நோய்கள் இல்லாதவர்களாக இருக்க வேண்டும், நீதிக்குப் பிழைத்திருக்க வேண்டும், ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் உள்ளவர்களாக இருக்க வேண்டும், ஐசுவரியவான்களாக இருக்க வேண்டும்........ **அப்படி இருக்கிறோமா? நம்மை நாமே சோதித்து பார்த்துக்கொள்வோம்.**

இயேசு நமக்கு எவற்றை தருவதற்கு மரித்தாரோ, அவற்றை பெற்றுக்கொள்ளாமல் அல்லது பெற்றுக்கொள்ள முயற்சிக்காமல், இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைத்து இயேசுவுக்காக வேதனை படுவதாலோ அல்லது அந்த வேதனைகளை பாட்டாக பாடுவதாலோ அல்லது அவரை புகழ்வதாலோ மாத்திரம் என்ன பயன் ? இன்னும் ஒரு விதத்தில் சொல்லப்போனால் இது "இயேசுவின் மரணத்தை, அவரது பலியை, இரத்தத்தை உபயோகமற்றதாக ஆக்குவதற்கு சமம்" அல்லவா ? உதாரணத்துக்கு ஏழ்மையில் வறுமையில் நோயில் வாடிக்கொண்டிருக்கும் மனைவி மக்களை காப்பாற்றுவதற்காக ஒரு சகோதரன் வெளிநாடு செல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அங்கே அவர் கடும் வெயிலிலும், குளிரிலும், தனிமையிலும், பலவிதமான கஷ்டங்களோடும் வேலை செய்து மாதம் தன் மனைவிக்கு 20,000 ரூபாய் அனுப்பி வைக்கிறார். சுமார் 4 வருடங்கள் கழித்து தன்

மனைவி மக்களை நல்ல நிலமையில் காண விடுமுறையில் செல்கிறார். அங்கே வறுமையில், துன்பத்தில், ஒரு கூரை இல்லாத வீட்டில் நோயில், ஏழ்மையில் அவரது மனைவியும் மக்களும் வாடி வதங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதைப்பார்த்து அவரது மனம் எவ்வளவு வேதனைப்படும். ஐயோ! நீங்கள் நல்ல நிலமையில் எல்லா சுகத்தோடும் வாழ வேண்டும் என்று அல்லவா நான் இத்தனை பாடு பட்டேன்; நான் பட்ட பாடுகளை எல்லாம் இப்படி வீணாக்கி விட்டாயே, என்று தன் மனைவியிடம் கோபப்பட மாட்டாரா? அதற்கு அவர் மனைவி, ஐயோ, அப்படி அல்ல, நீங்கள் எங்களுக்காக எவ்வளவு வேதனைப்பட்டீர்கள், பாடுபட்டீர்கள், கஷ்டப்பட்டீர்கள் என்று எனக்கு தெரியும், அவற்றை தினந்தோறும் நினைத்து கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் எப்படி இருக்கும். அது போலத்தான் இயேசு நமக்காக செய்தவற்றையும் நாம் வீணாகிப்போகும்படியாக வைக்கக்கூடாது. உண்மையில் நாம் இயேசுவை சிநேகிக்கிறோம் என்றால், அவரை கர்த்தராக ஏற்றுக்கொண்டோம் என்றால், அவர் எந்த நோக்கத்துக்காக கிருபாதார பலியானாரோ, அவற்றை நிறைவேற்றவேண்டும். அதுதான் உண்மையான அன்பு, உண்மையான கீழ்ப்படிதல்.

## இயேசு நமக்காக கிருபாதார பலியாகி நம்மை ரட்சித்தது எப்போது ?, தேவன் நம் பாவங்களை மன்னித்தது எப்போது ?

*எபி; 9; 11-28, 10; 10-14. யாத்; 12 ம் அதிகாரம். லேவி; 16. ஏசா; 53;6, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்.*

( இதன் விரிவான விளக்கத்துக்கு, தயவு செய்து " ரட்சிப்பு " என்னும் தலைப்பில் நான் எழுதி உள்ள வேதாகம படிப்பை படிக்கவும். )

இந்த வசனங்கள் எல்லாம் மிகத்தெளிவாக சொல்லுகிற படி, இயேசு நம் பாவங்களை மன்னித்ததும் நம்மை மீட்டு ரட்சித்ததும் நேற்றோ அல்லது இன்றோ அல்ல...சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு. அவர் கல்வாரி சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்து, தேவனுடைய மகாபரிசுத்த தலத்தில் தன் ரத்தத்தோடு பிரவேசித்த போது. தேவன் நம் பாவங்களை மன்னித்தது 2000 வருடங்களுக்கு முன்பு. இயேசு நம் பாவங்களுக்காக ஒரே ஒரு தரம் மாத்திரமே மரித்தார். அது நாம் பாவங்கள் செய்வதற்கு முன்பே. அவர் தினம் தினம், அல்லது மீண்டும், மீண்டும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து பாவ மன்னிப்பை வாங்குவது இல்லை.

இப்போது *ரோமர்; 10; 9,10* வசனங்களில் சொல்லப்பட்டிருப்பதன் படி *" என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.*

**விசுவாசித்து, அறிக்கை செய்யும் போது, இயேசு 2000 வருடங்களுக்கு முன்பு நமக்காக பெற்று தந்த ரட்சிப்பை ஏற்றுக்கொள்கிறோம், பெற்றுக்கொள்கிறோம்.**

நான் இன்ன தேதியில் ரட்சிக்கப்பட்டேன், அல்லது போன வருடம் இந்த மாதத்தில் ரட்சிக்கப்பட்டேன் என்று ஒருவர் சொல்லுவது சரிதான். ஆனால் அதன் உண்மையான் அர்த்தம், **அந்த நாளில் அவர் இயேசுவின் ரட்சிப்பை ஏற்றுக்கொண்டார், இயேசுவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டார், நித்திய ஜீவனை அடைந்தார், மறுபடியும் பிறந்தார்.** ஆனால் நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், இயேசு இவைகளுக்குண்டான எல்லாவற்றையும் நிறைவேற்றியது 2000 வருடங்களுக்கு முன்பு. அதாவது நாம் பிறப்பதற்கு முன்பு, பாவம் செய்வதற்கு முன்பு, பாவமன்னிப்பை கேட்குமுன்பு.

தேவன் தன் கிருபையினால் ( **கிருபை** - எந்த தகுதியும் இல்லாதவர்களுக்கு தேவனால் கொடுக்கப்படும் ஈவு ) எல்லோரையும் ரட்சித்திருக்கிறார்,பாவமன்னிப்பு கொடுத்திருக்கிறார். ஆனால் ஒருவர் இயேசு கிறிஸ்து நமக்காக செய்த பாவ நிவாரணத்தின் மேல் விசுவாசம் வைக்காத வரை, இயேசு கிறிஸ்துவின் ரட்சிப்பின் பலன், பாவ மன்னிப்பின் பலன் அவருக்கு விடுவிக்கப்படமாட்டாது. ஒருவர் இயேசுவை ரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாத வரை, அவர் இரட்சிப்பின் பலனை, பாவ மன்னிப்பின் பலனை பெற்றுக்கொள்ள முடியாது. தேவன், தன் கிருபையினால், இயேசு கிறிஸ்து மூலமாய் சகலத்தையும் நமக்காக செய்து வைத்திருக்கின்றார். என்றாலும், அதில் எதையாவது நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், கிரியை உள்ள விசுவாசம் அவசியம். *( யோவான்; 3;16, 3;36, 5;24, 6;40, 11;25, 12;46, 20;31, அப்போஸ்தலர்; 8;37, 10;43, 13;39, 16;31, ரோமர்; 5;2, 9;33, 10;9, 2தீமோ;3;15, 1யோவான்; 5;1 ).* விசுவாசமே, நம்மை கிருபைக்குள் நுழைய தகுதிப்படுத்துகிறது. கிருபை இல்லாமல் விசுவாசத்துக்கு வல்லமை இல்லை. விசுவாசம் இல்லாமல் தேவனுடைய கிருபையால் நமக்கு பலன் இல்லை.

## நம்பாவங்கள் மன்னிக்கப்பட்டது.

*யோவா 1:29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, **உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற** தேவ ஆட்டுக்குட்டி.*

*ஏசா 53:6 நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ **நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.***

*யோவா 4:42 அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே, கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய **உலகரட்சகர்** என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.*

*ரோம 5:19 அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப் பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் **நீதிமான்களாக்கப்படுவார்கள்.***

*1தீமோ 4:10 இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்; ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் **இரட்சகராகிய** ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.*

*1பேது 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, **அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்;** அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.*

*எபி 9:28 கிறிஸ்துவும் **அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு** ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.*

*1யோவா 2:2 **நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி** அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*

*( யோவா 3:16 - 17, யோவான்; 6;33, 51; 12:32; ஐசாயா; 53;11-12, 1 யோவான்; 4;14, எபி;2;9, 1 தீமோ; 2;6. ).*

இயேசு கல்வாரி சிலுவையில் தன் சரீரத்தில் சுமந்தது - " உலகத்தில் பிறந்து மரித்த, இருக்கிற, பிறக்கப் போகிற " சகல பேருடைய பாவத்தை / பாவங்களை. ரட்சிக்கப்பட போகிறவர்களின் பாவங்களையோ, அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட பிரிவை சேர்ந்தவர்களின் பாவங்களையோ அல்ல. **உலகத்தின் பாவத்தை.**
( **குறிப்பு;** *புதிய ஏற்பாட்டில் , பாவம், பாவங்கள்...என்று குறிப்பிடபட்டிருக்கின்ற எல்லா வார்த்தைகளின் தெளிவான அர்த்தத்துக்கு., " ஒரு மனிதன் எப்படி பாவி ஆகிறான், எப்படி நீதிமான் ஆகிறான் " என்ற எமது வேத பாடத்தை படிக்கவும் ).*
இப்போது, ஏதாவது ஒரு மனிதன் நரகத்துக்கு போகிறார் என்றால் அவர் செய்த பாவச்செயல்களின் காரணமாக அல்ல... அவர் பாவங்களை எல்லாம் சுமந்து, பாவ மன்னிப்பை பெற்று தந்த இரட்சகரான இயேசு கிறிஸ்துவை தன் ரட்சகராக ஏற்றுக்கொள்ளாததினால்.. . அது போலவே ஒரு மனிதன் பரலோகத்துக்கு போகிறார் என்றால், அவர் பாவச்செயல்கள் ஒன்றும் செய்யாமல் இருக்கிற காரணத்தால் அல்ல..... அவர் பாவங்களை எல்லாம் சுமந்து, பாவ மன்னிப்பை பெற்று தந்த ரட்சகரான இயேசு கிறிஸ்துவை தன் ரட்சகராக ஏற்றுக்கொள்வதினால்.. *(யோவான் 3:15,18,36; ரோமர் 2:6-9 )*
இந்த இடத்தில் நாம் நன்றாக மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், முதலில் பாவம் - கீழ்ப்படியாமைதான் மனிதனை நரகத்துக்கு செல்லவைக்கின்ற முக்கிய காரணமாக இருந்தது. ஆனால் இயேசு பாவத்துக்கான பிராயச்சித்த பலியானதால் *( 2 கொரி 5:21 ),* பாவத்தின் சம்பளமாகிய மரணம் - நித்திய நரகத்தில் இருந்து மனுக்குலத்தை மீட்டுக்கொண்டார். இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தின் ஒரு துளி *( 1 பேதுரு 1:19 )* இந்த உலகத்தின் பாவம் முழுவதையும் போக்க போதுமானது.

ஒரு மனிதர் தன் பாவங்களுக்காக நரகத்துக்கு செல்ல வேண்டும் என்பது நீதி. அது அவரது தவறுக்கு ஏற்ற தண்டனை. ஆனால், அப்பாவங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்து, ஒருவரும் நரகத்துக்கு செல்ல தேவை இல்லை என்ற வழிமுறையை உருவாக்கி வைத்திருக்கிற, இயேசுவின் பிராயச்சித்த பலியையும் வேண்டாம் என்று எட்டி உதைக்கிறவர்களுக்கு எவ்வளவு பெரிய தண்டனை கொடுக்கப்படவேண்டும் ?
இந்த இடத்தில்தான், இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகள் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், பாவம் பெரியது..... ஆனால் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அதைவிட மகாப்பெரியது. பாவத்தின் கொடிய விளைவுகள் ஏராளம்..... ஆனால் இயேசு கிறிஸ்துவின் ஒரு துளி இரத்தம் அக்கொடிய விளைவுகளை எல்லாம் மாற்ற போதுமானது. இப்பொழுது மீண்டும் ஒரு மனிதர் தன் பாவச்செயல்களுக்காக நரகம் செல்வதில்லை...... அப்படி நாம் எடுத்துக்கொண்டால், **அதாவது பாவச்செயல்கள் செய்பவர்கள் மாத்திரம் நரகத்துக்கு செல்வார்கள்** என்றால் " **பாவச்செயல்களை செய்யாத நல்ல மனிதர்கள், துறவிகள், பலரும் பரலோகம் செல்ல உரிமை உடையவர்களாகி விடுவார்கள். பாவச்செயல்கள்தான் ஒரு மனிதனை இப்போது நரகத்துக்கு அல்லது பரலோகத்துக்கு செல்ல வைக்கிற காரணி என்றால், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் என்ன பயன் ? ஒரு மனிதனை இப்போது நரகத்துக்கு செல்ல வைக்கிற** "மகாப்பெரிய பாவம் - அவருக்காக இரத்தம் சிந்தி மரித்த இயேசுவை விசுவாசிக்காத பாவம்". **இதுதான்** *யோவான் 16:8-9* **ல் பரிசுத்த ஆவியானவர் உலகத்தை கண்டித்து உணர்த்தும் பாவம்.**
***யோவா 16:8 அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். 9 அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,***

## எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டது.

*எபி 9:12 வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.*
*கொலோ 2:13 உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும்*

*மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து,* ***அக்கிரமங்களெல்லாவற்றையும்*** *உங்களுக்கு மன்னித்து;*

இயேசுவுக்குள் இருப்பவர்களுக்கு, ***எல்லா பாவங்களும்*** மன்னிக்கப்பட்டு விட்டன. *( ரோமர்; 4;8 )*
*எபி; 10;10-14* வசனங்களின் படி, அக்கிரமங்கள் எல்லாவற்றையும் என்று குறிப்பிடுவது, கடந்த கால, நிகழ்கால, எதிர் கால பாவங்களையும் சேர்த்து.

*எபி 10: 12 இவரோ,* ***பாவங்களுக்காக*** *ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து,*
*சங் 103:3 அவர் உன்* ***அக்கிரமங்களையெல்லாம்*** *மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,*

*தீத் 2:14 அவர் நம்மைச்* ***சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு,*** *தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*

நம்முடைய **எல்லா பாவங்களும்,** இயேசுவின் ஒரே கிருபாதார பலியினால் தீர்க்கப்பட்டாகி விட்டது. பலரும் நினைப்பது, வருங்கால பாவங்களை எப்படி இயேசு மன்னிக்க முடியும் ?. இப்படி நினைப்பவர்கள் நின்று நிதானமாக யோசிப்பது நல்லது. இயேசு நமது பாவங்களுக்காக மரித்தது 2000 வருடங்களுக்கு முன்பு, நாம் பாவம் செய்வதற்கு முன்பு. இப்போது இருக்கிற காலம், அன்று **" வருங்காலமே ".** இப்போது நடக்கிற பாவங்கள் எல்லாம் அப்போது " வருங்கால பாவங்களே ". பாவங்கள் செய்யப்படு முன்பே, வருங்கால பாவங்களை இயேசு மன்னிக்க முடியாது என்று சிலர் சொல்வார்களானால் - அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படவில்லை என்று அர்த்தம். **இங்கே நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்கள் அனைத்துக்குமான கிருபாதார பலியானது உண்மை, தேவன் மனுக்குலத்தின் எல்லா பாவங்களையும் மன்னித்ததும் உண்மை... ஆனாலும் இந்த பாவமன்னிப்பு ஒருவருக்கு கிடைக்க வேண்டுமென்றால் அவர் 'இயேசுவில் விசுவாசம் வைக்க வேண்டும். விசுவாசம் இல்லாமல் தேவனுடைய இந்த கிருபையை யாரும் அடைய முடியாது. விசுவாசிப்பவர்களுக்கே இந்த கிருபாதார பலியும் அதனால் கிடைத்த பாவமன்னிப்பும் பலிக்கும்.** விசுவாசிக்காதவர்களுக்கு பாவ மன்னிப்பு இல்லை.
***ரோம 3:26 கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.***
( *ரோமர் 5:2, எபே 2: 8* )
பவுல் *கொலோ; 2; (11-13)* ம் அதிகாரத்தில் நம்முடைய ரட்சிப்பின் அற்புதமான உபயோகங்களை பற்றி குறிப்பிடுகிறார். இவை எல்லாம் இயேசுவால் நடந்தவை, இயேசு கிறிஸ்து இவை எல்லாவற்றையும் நமக்காக அனுபவித்ததனால் நடந்தேறினவை. அவருடைய அனுபவம் நம் அனுபவமாயிற்று. இறையியலில், இதை குறிப்பிடுகிற சொற்றொடர் **" இயேசு நம் பொருட்டு அனுபவித்த துன்பங்கள் "**. " நம் பொருட்டு " என்ற வார்த்தையின் அர்த்தம் **" நமக்கு பதிலாக இன்னொருவர் "**. நாம் சுயமாக பாவத்தை மேற்கொள்ள வில்லை. இயேசு ஏற்கனவே நமக்காக பாவத்தை மேற்கொண்டு விட்டார். இப்போது நாம் அவரை நம்மூலமாக வாழ விட்டு அந்த வெற்றியை பிரகடனப்படுத்துகிறோம் ( *கலா; 2;20* ). இயேசு ஏற்கனவே மரணத்தை ஜெயித்து விட்டார், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை இப்போது நமக்குள் இருக்கிறது. *( எபே; 1;19 ).*

*சங் 103:12* ***மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய்*** *அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.*
*யோவா 1:29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.*
*1யோவா 1:7 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம்* ***சகல பாவங்களையும் நீக்கி,*** *நம்மைச் சுத்திகரிக்கும்.*
*1யோவா 2:2 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல,* ***சர்வலோகத்தின் பாவங்களையும்*** *நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*
*( எபி 1:3 1பேது 3:18 1யோவா 3:5, 1 பேதுரு; 3;18, எபே;4;32, கலா;1;4. )*

### ஒரு விசுவாசி எவ்வகை பாவத்துக்கும் விலகி இருக்க வேண்டும்.

ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், சகோதரா! இப்படி சொல்வது விசுவாசிகளிடம் தண்டனை பயத்தை நீக்கி அவர்களை பாவம் செய்ய வைக்குமே, என்று. இது 'உங்களுடைய கருத்தாக' இருக்கலாம். ஆனால் தயவு செய்து வேதாகமத்தின் கருத்தை பாருங்கள்.
***தீத் 2:11 ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,***
*12 நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி,* ***13*** *நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி* ***நமக்குப்போதிக்கிறது.***

வேதாகமத்தில் புதிய உடன்படிக்கையின் மாபெரும் ஒரு கருத்து என்னவென்றால், **"தேவனுடைய கிருபை நம்மை பாவம் செய்யாத படி போதிக்க வேண்டும், தேவன் நம்மை தண்டிப்பாரோ என்ற பயம் அல்ல.**" ஒருவர் தண்டனைக்கு மாத்திரம் பயந்து அல்லது தேவன் விட்டுப்போய்விடுவார் என்று பயந்து நீதிமானாக ஜீவிப்பாரானால், அவர் நியாயப்பிரமாணத்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று அர்த்தம் *( ரோமர் 6:14 ).*

ஒருவர் உண்மையில் தேவனுடைய நிபந்தனையற்ற அன்பையும் கிருபையையும் புரிந்து கொண்டால் அது பாவத்தில் இருந்து அவரை விடுவிக்கும். பாவம் செய்ய விடுவிக்காது.

*ரோம 5:8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் 9 இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. 10 நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

**"நான் பாயியாயிருந்த போதே,** தேவன் என்மேல் வைத்த அன்பினால் எனக்காக மரித்தார், இப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிற என்மேல் எவ்வளவு அன்பு கூருவார் ? ". இது ஒருவருக்கு ஒரு வெளிப்பாடாக வரவேண்டும். அப்போதுதான் அவர், " என் தேவன் என்மேல் எவ்வளவாக அன்பு கூர்ந்திருக்கிறார், எப்படி அவருக்கெதிராக நான் பாவம் செய்வேன் ? நான் பாவம் செய்ய மாட்டேன்" என்ற நிலைக்கு வருவார். இதுதான் ஒரு உண்மையான விசுவாசியின் மனப்பாங்காக இருக்க வேண்டும்.

இதனால், நாம் பாவம் செய்தாலும் தேவன் நம்மை விட்டு போக மாட்டார் அல்லது தண்டிக்க மாட்டார் என எடுக்கவே கூடாது. பாவத்துக்கு கொடிய விளைவுகள் உண்டு. நாம் பாவம் செய்தால் மற்றவர்கள் தண்டிப்பார்கள, உலகம் தண்டிக்கும், சாத்தான் நம்மை குற்றப்படுத்தி தண்டனைக்குள்ளாக்குவான், நாம் விதைத்ததை அறுவடை செய்வோம், பாவத்துக்கு அடிமையாவதன் மூலம் நோய்கள், அழிவு, மரணம் வரும். பாவத்தின் சம்பளம் என்றுமே மரணம்தான். *( யோவான் 10:10, ரோமர் 6:1,2, 15, 16, 23; கலா 6:7,8 ).* **ஆகவே ஒரு விசுவாசி எவ்வகை பாவத்துக்கும் விலகி இருக்க வேண்டும்.**

## இயேசுவின் கிருபாதார பலியினால் நாம் பூரணப்படுத்தப்பட்டோம்.

*எபி 10:14 ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் **என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.***
*கொலோ 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் **பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.***
பூரணப்படுத்தப்பட்டது யார் ?.
" **பரிசுத்தமாகப்படுகிறவர்கள் ".** அதாவது பிரதிஷ்டை செய்யப்பட்டு பரிசுத்தமாகப்பட்டவர்கள்.
மனிதன் மூன்று பாகங்களினால் ஆக்கப்பட்டிருக்கிறான். ஆவி, ஆத்துமா, சரீரம். *( 1 தெச; 5;23* ). தேவன் ஆவியாயிருக்கிறார். நாம் அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகளாயிருக்கிறோம். நம்முடைய ஆவியே தேவனோடு தொடர்பு கொள்ளுகிறது. நம்முடைய ஆவியே உண்மையில் " நீங்கள் " *( ரோமர்; 8;9 ).* நம்முடைய பழைய ஆவி, நாம் மறுபடியும் பிறப்பதற்கு முன்பு "மரித்ததாயிருந்தது". அதாவது தேவனோடு ஒரு தொடர்பும் இல்லாதிருந்தது. நாம் மறுபடியும் பிறக்கும்போது, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஆவியை தேவன் நமக்கு தருகிறார்.

*எபே 4:24 மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.*

இந்த புதிய ஆவியானது, இயேசுவைப்போல பரிசுத்தமும், பூரணமும் உள்ளதாகும். ( *1கொரி 6:17 அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். 1யோவா 4:17 நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.).*

எனென்றால், இது இயேசுவின் ஆவி. *( கலா 4:6 மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.)*

இந்த மறுபடியும் பிறந்த ஆவி, பரிசுத்த ஆவியினால் முத்திரையிட்டு மூடப்பட்டிருக்கிறது. பாவம் இந்த முத்திரையை துளைக்க முடியாது. *(எபே 1:13 நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.)*

இந்த மறுபடியும் பிறந்த ஆவி, பாவம் செய்யாது. *( 1 யோவான்; 3;9 ).* ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது, அவருடைய சரீரமும் ஆத்துமாவும் அந்த பாவத்தில் பங்கு கொள்ளுகிறது. அதனால் சரீரமும் ஆவியும் பாவத்தினால் வரும் துன்பங்களை அனுபவிக்கிறது. ஆனால் ஆவியோ பரிசுத்த ஆவியினால் மூடப்பட்டிருப்பதனால் தன்னுடைய பரிசுத்தத்தை தக்கவைத்துக்கொள்கிறது. தேவன் நம் ஆவிக்கெதிராக எந்த பாவத்தையும் பிடிப்பதில்லை. நம்முடைய ஆவி பரிசுத்தமாகவும், மாசில்லாததுமாயிருக்கிறது. *( எபே; 4;24, எபி; 12;23, 1 யோவான்; 4;17 )* இது நம்முடைய செயல்களினால் மாறாது.

இந்த பூரணம் நம்முடைய மறுபடியும் பிறந்த ஆவியில் இருக்கிறது. *( எபி 12:23 பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், சங் 32:2 எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான். )* எனவேதான் *எபிரேயர் 10.14* சொல்லுகிறது ***நாம் என்றென்றைக்கும் பூரணப்படுத்தப்பட்டவர்கள்.***

## நாம் நித்திய மீட்பை பெற்றுக்கொண்டோம்;

*எபி 9:12 வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, **நித்திய மீட்பை** உண்டுபண்ணினார்.*

### " மீட்பு " என்பது என்ன ?.

*எபே 1:7 அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*

இவ்வசனம் சொல்லுகிறது மீட்பு என்பது **" பாவமன்னிப்பு "**. இங்கே, மீட்பு என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை " அப்பொலுட்ரோசிஸ் " என்பதாகும். இவ்வார்த்தையின் அர்த்தம் " மீட்கும் பொருள் கொடுத்து, வாங்கப்பட்ட விடுதலை அல்லது விடுவிப்பு.".

தேவன் நம்மை அவருக்கென்று சிருஷ்டித்தார், ஆனால் நாம் நம்மை பிசாசுக்கு அடிமைகளாக விற்று விட்டோம். தேவன் மீண்டும் நம்மை இயேசுவின் ரத்தத்தால் விலைக்கு வாங்கினார். இச்செயலை தேவன், பழைய ஏற்பாட்டில் ஓசியா தீர்க்கதரிசி மூலமாக விவரித்து இருக்கிறார். *( ஓசியா; 1; 2-3, 3;2 ).* நாம் மீட்கும்படுவதற்கு ( பாவ மன்னிப்புக்கு ) கொடுக்கப்பட்ட விலை இயேசுவின் ஜீவன். அதாவது அவருடைய ரத்தம். *( **கொலோ 1:14** (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. ).* இயேசுவின் ஜீவனே நம்மை மீட்கும் பொருள் *( மத்; 20;28, மாற்கு; 10;45 ).*

இந்த மீட்பு ( பாவ மன்னிப்பு ) நாம் கஷ்டப்பட்டு பெற்றுக்கொள்வதல்ல. இது எற்கனவே செய்து முடிக்கப்பட்ட ஒன்று. நம்முடைய எல்லா பாவங்களும், கடந்த கால, நிகழ்கால, எதிர்கால.. எல்லா பாவங்களும் ஏற்கனவே மன்னிக்கப்பட்டு விட்டன. இந்த பாவமன்னிப்பு இயேசுவின் ரத்தத்தினால் கிடைத்திருக்கிறது. நமக்கு தேவையான இந்த தெய்வீக தயவை, மனிதனுடைய எந்த முயற்சிகளும், செயல்களும், சுய நீதிகளும், பெற்றுத்தரவே முடியாது. எனவே, இயேசுவின் ரத்தம் என்பது, நம்முடைய பாவங்களுக்காக தேவன் கொடுக்கிற விலை. பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தே நாம் காணலாம், பாவம் மிகவும் அபாயமானது அதன் தண்டனை மரணம். *எசே 18:20 **பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்;.....*** . இந்த மரணம் என்கிற தண்டனையைதான், பழைய ஏற்பாட்டின் ரத்தம் சிந்தப்படுகிற பலிகள் குறிப்பிடுகின்றன. ஆனால் இயேசுவின் ரத்தமோ எதையும் குறிப்பிடுவது அல்ல, அது உண்மையில் இயேசுவின் ஜீவன் *( லெவி; 17;11 ).* இந்த ஜீவன் தான் நம்முடைய மீட்பை ( பாவ மன்னிப்பை ) நமக்கு வாங்கி தந்தது. பாவ மன்னிப்பு என்பது, வேதாகமத்தின் ஒரு முக்கியமான கருத்து ஆகும். இந்த பாவமன்னிப்பை நமக்கு பெற்று தந்தது இயேசுவின் ரத்தம் ஆகும். இந்த பலியானது எவ்வளவு பெரியது என்றால். நம்முடைய பாவங்களை விட மிக மிக பெரியது, எடை உள்ளது - இயேசுவின் ரத்தம். **இயேசுவின் ரத்தம் உலகத்தின் சகல பாவங்களுக்கும் - கடந்த கால, நிகழ் கால, எதிர்கால - மன்னிப்பு வாங்கி தந்தது.** *( ரோமர்; 4;8 ).*

பாவமன்னிப்பு நமது ரட்சிப்பின் முடிவான குறிக்கோள் அல்ல. அது ஒரு முக்கியமான படி. ரட்சிப்பின் முக்கிய குறிக்கோள் " தேவனோடு உறவு " *( யோவான்; 17;3 ).* இந்த உறவுக்கு பாவம் ஒரு தடையாக இருந்தது. இந்த தடையை தேவன் இயேசு கிறிஸ்துவின் ரத்தம் மூலமாக போக்கினார். பாவமன்னிப்பில் மாத்திரம் நின்று கொண்டு, தேவனோடு ஒரு நல்ல உறவுக்குள் கடந்து செல்லாதவர்கள், ரட்சிப்பின் முக்கிய நோக்கத்தை தவற விடுகின்றனர். நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன. அதனால் நாம் தேவனோடு ஒரு நல்ல உறவுக்குள் கடந்து செல்ல முடியும். இந்த மீட்பு ( பாவ மன்னிப்பு ) நித்தியமானது *( எபி; 9;12 ).* இது நமது எல்லா அக்கிரமங்களில் இருந்தும் நம்மை சுத்திகரிக்கும் படியாகவும் *( தீத்து; 2;14 ),* ஜீவனுள்ள தேவனுக்கு நம்மை ஊழியம் செய்யும்படியாக ஆக்கும்படியாகவும் *( எபி; 9;14 )* உள்ளது.

புதிய உடன்படிக்கைக்குட்பட்டு, ரட்சிக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யத்தில் அங்கத்தினராக இருக்கும் ஒரு விசுவாசியை பற்றி இயேசு இவ்வாறாக கூறுகிறார். *மத் 11:11 ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.*

இயேசு நமக்காக சிலுவையில் கிருபாதார பலியானதால், நாம் பெற்றுக்கொண்ட ரட்சிப்பின் மகத்துவத்தை பற்றி வேதாகமம் இப்படியாக கூறுகிறது.

*1பேது 1:10 உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; 11 தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். 12 தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.*

ரட்சிக்கப்பட்டவர்களை வேதாகமம் எப்படி அழைக்கிறது என்றால் - **புதிய சிருஷ்டி, பரிசுத்தவான்கள், நீதிமான்கள், விசுவாசிகள், தேவனுடைய மக்கள், தேவனுடைய சுதந்திரர், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர், பரிசுத்த ஜாதி, தேவனுக்கு சொந்தமான ஜனம்.......இன்னும் பல மேன்மையான விதங்களில்.**

ஆனாலும் ரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு - தாங்கள் பெற்றுக்கொண்டுள்ள ரட்சிப்பின் மேன்மை என்ன ? இந்த இரட்சிப்பு நமக்கு எப்படி கிடைத்தது ? இந்த ரட்சிப்பால் நமக்கு என்ன கிடைத்திருக்கிறது ?. நாம் ரட்சிக்கப்பட்ட போது எவ்வளவு பாவங்கள் மன்னிக்கப்பட்டது ? ஏதாவது தவறுதலாக பாவம் செய்து விட்டால் இந்த ரட்சிப்பை இழந்து போவோமா ?. ஒரு வேளை மீண்டும் பாவம் செய்து விட்டால் என்ன நடக்கும் ? தேவன் நம்மை தண்டிப்பாரா ? தேவ பிரசன்னத்தை இழந்து போவோமா? ........என்பது போன்ற பல கேள்விகளுக்கு , வேதாகமத்தில் இருந்து சரியான பதில் தெரியாமல் இருக்கிறார்கள். மேலும் புதிய உடன்படிக்கையை, கிருபையை, நித்திய மீட்பை, இயேசுவின் கிருபாதார பலியை, தேவனின் சுபாவத்தை, பாவ மன்னிப்பை, ரட்சிப்பை, பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை, நியாயப் பிரமாணத்துக்கும் கிருபைக்கும் உள்ள வித்தியாசத்தை பற்றி, அற்புதங்களுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றி அறியாமல் இருப்பதனால் குழப்பத்துக்குள்ளாக்கப்படுகிறார்கள். பாவ மனசாட்சியால், சாத்தானால் குத்தப்பட்டு, குற்றப்படுத்தப்பட்டு ஒரு வெற்றி உள்ள விசுவாச வாழ்க்கை வாழ முடியாமல் தவிக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தான் சிலுவையில் கிருபாதார பலியாகி மரித்து பெற்றுத்தந்த நித்தியஜீவனை ( *யோவான் 3;16* ) ஜீவிக்க முடியாமல் ஆக்கப்படுகிறார்கள். *எபேசியர் 1;3* ல் குறிப்பிடப்பட்டுள்ள **"சகல ஆசீர்வாதத்தையும்"** அனுபவிக்காமல் இருக்கிறார்கள். இன்னும், இன்னும் ஏதாவது கிரியைகள் செய்து பரிசுத்தமாகலாம், ஒரு படி கூட இயேசுவை கிட்டி சேரலாம் என்று முயற்சிக்கிறார்கள். பிசாசு, உலகம் தருகிற பல காரியங்களை தேவன் தருகிறதாக ஏற்றுக் கொள்கிறார்கள். சாத்தானுடைய வஞ்சகத்தால் தடுக்கப்பட்டிருக்கிற பல ஆசீர்வாதங்களை **"தேவனுடைய சித்தம் இல்லை"** என்று விட்டு விடுகிறார்கள். சத்தியம் என்ன என்று தெரியாமல் அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அறிந்த சத்தியம் மாத்திரமே ஒருவரை விடுதலையாக்கும்.

அன்பு சகோதர சகோதரி........*ரோம 3:4* சொல்லப்பட்டிருக்கிற படி. ***" அப்படியாக்கமாட்டாது: நீர் உம்முடைய வசனங்களில் நீதிபரராய் விளங்கவும், உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும் இப்படியாயிற்று என்று எழுதியிருக்கிறபடி, தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக "...***

**ரட்சிக்கப்பட்ட உங்களை பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறதோ அது மாத்திரமே உண்மை..... அதற்கு எதிரான எந்த மனித வார்த்தைகளும், சூழ்நிலைகளும், பிரசங்கங்களும் பொய்.**

## பாவங்களுண்டு என்று உணர்த்தும் மனசாட்சி இனி தேவை இல்லை.

*எபி 10:1 இப்படியிருக்க, நியாப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.*

*2 பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?*

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணமும், அதன் பலிகளும், இயேசுவின் உண்மையான பலியின் நிழலாகவும் அடையாளமாகவும் இருக்கிறது. நிழல்களுக்கும் அடையாளங்களுக்கும், அந்த பலிகளை செலுத்துபவர்களை பூரணப்படுத்த முடியாது. இப்பலிகள் பாவத்தை எடுத்துப்போட முடியாது. இவைகளால் பாவத்தை மூட மாத்திரமே முடியும். எனவே அவைகள் பாவத்துக்காக தொடர்ந்து செலுத்தப்பட்டுக்கொண்டிருந்தது. *எபி;10;1* ஆம் வசனம் சொல்லுகிறது, பழைய ஏற்பாட்டு பலிகள் அவற்றை செலுத்தியவர்களை பூரணப்படுத்தவில்லை. இதை நிரூபிக்கிற வகையில் அப்பலிகள் தொடர்ந்து செலுத்தப்பட்டுக்கொண்டிருந்ததை, பவுல் அப்போஸ்தலர் எடுத்து கூறுகிறார். இந்த பலிகள் அவற்றை செலுத்தியவர்களை பூரணப்படுத்தி இருந்தால், அவர்கள் மீண்டும் மீண்டும் அப்பலிகளை செலுத்திக்கொண்டிருக்க மாட்டார்கள். *எபிரேயர் 9;12,15,25-28*, வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள படி, **ஒரு முறை பூரணமாக்கப்பட்டவர்கள் என்றால் எப்போதும் பூரணமாக்கப்பட்டவர்களே.**

பழைய ஏற்பாட்டின் பலிகள் ஆராதனை செய்கிறவர்களை பூரணப்படுத்த வில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் கிருபாதார பலி ஆராதனை செய்பவர்களை பூரணப்படுத்திற்று. இதன் மூலம் கிடைக்கிற **"இன்னும் பாவங்கள் உண்டென்று உணர்த்தும் மனசாட்சி தேவை இல்லை "** என்னும் உண்மை ஒவ்வொரு மறுபடியும் பிறந்தவருடைய வாழ்விலும் அனுபவப்பூர்வமாக இருக்க வேண்டும். இதை இன்னொரு வேதாகமம் NIV " ஆராதனை செய்பவர்கள் ஒரு முறை பரிசுத்தமாக்கப்பட்டிருந்தால், இன்னும் தங்கள் பாவங்களுக்காக குற்ற உணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை " என்று கூறுகிறது. **இதை பல விசுவாசிகளும் தவற விட்டு விட்டனர். ஒரு சாதாரண விசுவாசி எப்போதும் குற்ற உணர்வு உள்ளவராகவே இருக்கிறார். அவர் நினைக்கிறார், அவரது பாவங்கள் அடுத்து பாவம் செய்வது வரை மட்டுமே மன்னிக்கப்பட்டிருக்கிறது என்று. அவர்களுக்கு நித்திய மீட்பு என்ற எண்ணம் இல்லை.**

இயேசு கிறிஸ்து நமக்காக பட்ட அடிகளும், நிந்தையும், அவமானமும், முள்முடியும், சிலுவை மரணமும் ஏதோ ஒரு 'துக்க வெள்ளிக்கிழமை' மாத்திரம் நினைத்து பார்த்துவிட்டு பின் மறந்து போகுமளவுக்கு சாதாரணமானவைகள் அல்ல. நம் கடந்த கால, நிகழ் கால, வருங்கால...எல்லா பாவங்களும், இயேசுவின் ஒரே கிருபாதார பலியினால் மன்னிக்கப்பட்டாகி விட்டது. இனிமேல் நமக்கு இன்னும் பாவங்கள் உண்டென்று உணர்த்தும் மனசாட்சி தேவை இல்லை.

## முழுகுதலும், கழுவுதலும்.

*யோவா 13:5 பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.*
*6 அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.*
*7 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இன்மேல் அறிவாய் என்றார்.*
*8 பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்.*
*9 அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான்.*
*10 இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.*

இவ்வசனங்களில் இரண்டு விதமான **"கழுவுதல்களை"** பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. *வசனங்கள் 6, 8, 9, 10* ஆகியவற்றில் **"சரீரத்தின் ஒரு பகுதியை மாத்திரம்"** கழுவுதல் குறிப்பிடப்பட்டுள்ளது. வசனம் 10 ல் **"முழுகினவன்"** என்ற வார்த்தை, **'முழுவதுமாக குளிப்பதை'** குறிப்பிடுகிறது. ஒரு குளத்தில் சென்று குளித்து விட்டு வருகிறவர் திரும்பி நடந்து வரும்போது அவரது கால்கள் அழுக்காகலாம். அவர் வீட்டுக்கு வந்த பின் கால்களை மாத்திரம் கழுவினால் போதும். முழுவதுமாக குளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதன் ஆவிக்குரிய அர்த்தம் என்னவென்றால், ஒவ்வொரு விசுவாசியும் இயேசுவின் இரத்தத்தால் ஒரே முறை அவரது பாவங்களில் இருந்து **முழுவதுமாக கழுவி சுத்திகரிக்கப்பட்டிருக்கிறார்.** இது அவரது நிரந்தர நிலை *( எபி 9:12; 10:10, 14 ).* அவரது வாழ்க்கையின் "நடத்தையினால்" சில பாவங்கள் வந்து விடலாம். இது அவர் விருப்பப்பட்டு செய்வதில்லை, என்றாலும் இந்த "அழுக்கு" கழுகப்பட வேண்டும். இதற்காக அவர் மீண்டும் கல்வாரிக்கு சென்று இயேசுவின் இரத்தத்தால் கழுகப்பட வேண்டியதில்லை. இதற்குதான் இயேசு சொன்னார், "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்". நம் வாழ்க்கையில் உள்ள பாவங்கள் தேவனோடு உள்ள நமது உறவை, "பங்கை" பாதிக்கும். நம் இருதயம் நம்மை குற்றப்படுத்தும் *( 1 யோவான் 3:20 ).* இம்மாதிரி சமயங்களில் நாம் செய்ய வேண்டியது *1யோவா 1:9* ***நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.***

**'அறிக்கை'** செய்வது என்ற வார்த்தையின் அர்த்தம் "ஒரே மாதிரியாக சொல்லுவது". தேவன் நம்பாவங்களை பற்றி சொல்லியிருப்பதை அதேமாதிரி சொல்வதுதான் "அறிக்கை செய்வது". அப்படி செய்யும்போது நம் மனம் சீராகி, இருதயத்தின் குற்றப்படுத்துதல் நீங்கி மீண்டும் தேவனோடு நல்லுறவில் ஜீவிக்கலாம்.

அன்பு சகோதரா! சகோதரி! இயேசுகிறிஸ்து ஒரு நாள் நமக்காக கல்வாரி சிலுவையில் நம்பாவங்களுக்கான கிருபாதார பலியானார். இயேசு கிறிஸ்துவின் பாடுகளை, மரணத்தை தியானிக்கும் இந்த நாட்களில் அவர் எதற்காக இந்த பாடுகள் பட்டார் என்று தியானிப்போம். இதைப்படிக்கும் யாராவது இரட்சிக்கப்படாமல் இருந்தால், **"இயேசு உங்களை பாவத்தின் சம்பளத்தில் இருந்து, நித்திய மரணத்தில் இருந்து மீட்டுக்கொள்வதற்காகத்தான் மரித்தார்" என்று விசுவாசித்து இரட்சிக்கப்படுங்கள். இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் 'இயேசு எதற்காக மரித்தார்' என்று நன்றாக மனதிலாக்கிக்கொள்ளுங்கள்.** அந்த ஆசீர்வாதங்களில் வாழுங்கள். அவற்றை மற்றவர்களுக்கும் கொடுங்கள்.

**ஆமென்.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 25572195, 99663557. 99638328. Your comments, if they will edify the church, are welcome.

**Resources;** Adam Clarke's Bible commentary, Barne's Notes on the New Testament, Mcclintock and Strong encyclopedia, Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Vine's expository Dictionary of New Testament words, Strong's bible concordance, Don krow's Discipleship evangelism lessons, Wuest's bible commentary, Wuest's New Testament word studies, Vincent's Word Studies in the New Testament, International Standard Bible Encyclopedia, …etc.. All bible quotes are from King James Version. In Tamil Bible some verses may by above or below than the quoted reference.

----------------------------